செ.வெ.எண்:85 நாள்: 31.01.2019

**நாகப்பட்டினம் மாவட்டத்தில் 2019 ஜனவரி 1-ஆம் தேதியை தகுதி நாளாக கொண்டு தீவிர முறையிலான சிறப்பு சுருக்க முறை திருத்தம் 2019-க்கான இறுதி வாக்காளர் பட்டியலை**

**மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார் இ.ஆ.ப.அவர்கள் வெளியிட்டார்.**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் 2019 ஜனவரி 1-ஆம் தேதியை தகுதி நாளாக கொண்டு தீவிர முறையிலான சிறப்பு சுருக்க முறை திருத்தம் 2019-க்கான இறுதி வாக்காளர் பட்டியலை இன்று (31-01-2019) மாவட்ட ஆட்சியர் அலுவலத்தில், மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப அவர்கள் வெளியிட்டார்.

வாக்காளர் பட்டியலை வெளியிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

“ நாகப்பட்டினம் மாவட்டத்தில் தீவிர முறையிலான சிறப்பு சுருக்க முறை திருத்தம் 2019-க்கான வாக்காளர் பட்டியல் வாக்காளர் பதிவு அலுவலர் அலுவலங்கள், உதவி வாக்காளர் பதிவு அலுவலர் அலுவலகங்கள் மற்றும் அனைத்து வாக்குசாவடி மையங்களிலும் இன்று வெளியிடப்படுகிறது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் மொத்தம் 1511 வாக்கு சாவடிகள் உள்ளன. இதற்கு முன்னர் 1.9.2018 அன்று வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலின்படியான மொத்த வாக்காளர்கள் 12,49,537 பேர் இருந்தனர். இதில் ஆண் வாக்காளர்கள் 6,18,557- பேர்களும் பெண் வாக்காளர்கள் 6,30,951 பேர்களும் இதர வகுப்பினர் 29 பேர்களும் இருந்தனர்.

தற்பொழுது 2019 ஜனவரி 1-ஆம் தேதியை தகுதி நாளாக கொண்டு 18 வயது நிரம்பிய வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்திட 1.9.2018 முதல் 31.10.2018 வரையிலான தேதியில் விண்ணப்பங்கள் பெறப்பட்டது.

இதில் ஆண் வாக்காளர்கள் 11,913 பேர்களிடமிருந்தும், பெண் வாக்காளர்கள் 14,024 பேர்களிடமிருந்தும் இதர வகுப்பினர் 5 பேர்களிடமிருந்தும் ஆக கூடுதாக 25,942 பேர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு உரிய விசாரணைக்கு பின்னர் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்டது.

மேலும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் 31.01.2019 இன்றைய நாளை அடிப்படையாக கொண்டு இறப்பு, முகவரி மாற்றம், இரட்டிப்பு பதிவு காரணங்களுக்காக 4,751 ஆண் வாக்காளர்களும், 4,242 பெண் வாக்காளர்களும் 4 இதர வகுப்பினர்களும் வாக்காளர் பட்டியலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

தற்பொழுது நாகப்பட்டினம் மாவட்டத்தில் தீவிர முறையிலான சிறப்பு சுருக்க முறை திருத்தம் 2019-க்கான வாக்காளர் பட்டியலில் ஆறு சட்டமன்ற தொகுதிகளில் கீழ்கண்டவாறு வாக்காளர்கள் உள்ளனர்.

| வ.எண் | சட்டமன்ற தொகுதியின் பெயர் | ஆண் | பெண் | இதரர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | 160. சீர்காழி | 1,17,169 | 1,19,496 | 7 | 2,36,672 |
| 2 | 161. மயிலாடுதுறை | 1,15,721 | 1,16,925 | 13 | 2,32,659 |
| 3 | 162. பூம்புகார் | 1,28,213 | 1,29,481 | 3 | 2,57,697 |
| 4 | 163. நாகப்பட்டினம் | 91,422 | 96,390 | 5 | 1,87,817 |
| 5 | 164. கீழ்வேளூர் | 82,966 | 85,710 | 2 | 1,68,678 |
| 6 | 165.வேதாரண்யம் | 90,228 | 92,731 | 0 | 1,82,959 |
| | மொத்தம் | **6,25,719** | **6,40,733** | **30** | **12,66,482** |

மேலும், 01.01.2019-ஐ தகுதி நாளாக கொண்டு நடைபெற உள்ள தொடர் திருத்தத்தில் பொதுமக்கள் தங்களின் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தங்கள் மற்றும் முகவரி மாற்றத்திற்கான உரிய படிவங்களை தொடர்புடைய அலுவலகங்களில் சமர்ப்பித்தோ அல்லது www.nvsp.in என்ற இணையதள முகவரியில் ஆன்லைன் மூலம் விண்ணப்பித்தோ பயன் பெறுலாம்" என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திரு.பக்ரிநாத், சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி.வேலுமணி, செய்தி மக்கள் தொடர்புஅலுவலர்திரு.மீ.செல்வக்குமார்,வட்டாட்சியர்கள் திரு.இராஜகோபால்(தேர்தல்), திரு.இளங்கோவன் (நாகப்பட்டினம்) மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் உட்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்திவெளியீடு: செய்திமக்கள்தொடர்புஅலுவலகம், நாகப்பட்டினம்.**